உ
சிவமயம்
அகில இலங்கை இந்து மாமன்றம்
(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)
ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்
Chairman of the Board of Trustees
வி. கயிலாசபிள்ளை
V.Kailasapillai
Phone:2575566 (Res)
Fax : 2575472
hariomak@gmail.com

தலைவர்
President:
கந்தையா நீலகண்டன்
Kandiah Neelakandan
Phone: 2580807 (Res)
2371100 (Off) - Fax : 2371111
neela@mnlaw.lk

பொதுச் செயலாளர்
Hony. General Secretary:
வேலுப்பிள்ளை கந்தசாமி
Velupillai Kandasamy
Phone: 2586620 (Res)
Mobile: 071-5349150
vkandasami@gmail.com

பொருளாளர்
Hony. Treasurer:
அ.கயிலாசபிள்ளை
Abirami Kailasapillai
Phone: 2575566 (Res)
Fax : 2575472
hariomak@gmail.com

13.01.2017

# "தை" பிறப்பதுடன் எமது மக்களின் துயரங்கள் நீங்க வேண்டும்....
# சிறையில் வாடும் எம் உடன்பிறப்புக்கள் விடுதலை அடைய வேண்டும்...
# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தைப்பொங்கல் செய்தி

மலரும் தைப்பொங்கல் திருநாள் தமிழர் வாழ்வில் நல்லதோர் விடியலைத்தரவேண்டும் என்ற எண்ணமே மனமெங்கும் பொங்கிநிற்கிறது. தமிழ் மக்களின் பண்பாடு, பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் தனிப் பெரும் விழா **"பொங்கல் விழா"**. பண்டுதொட்டு தமிழ் மக்கள் இத்திருநாளில், இவ்வுலகில் உயிர்கள் வாழத் துணைபுரியும் சூரியனை தெய்வமாக வழிபட்டும், உழவர் பெருமக்களின் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்தும் வாழ்ந்தும் வந்தனர். துன்பமெல்லாம் நீங்கும் நன்நாளாகவும், அறுவடைப்பொங்கல் விழாவாகவும் இதனை கோலாகலமாகக் கொண்டாடி வந்தனர். உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தாருடன் கூடிக்குலாவி கதைபேசி வாழ்ந்த அந்த இனிய நினைவுகள்தான் நிழலாடுகிறதே தவிர வயலும் வயல் சார்ந்த இடமான மருதநிலப்பரப்பை அதிகமாக நம்பிவாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து, இன்னலுற்று, இருப்பை இழந்து ஏக்கமுற்ற நிலையில் ஒரு நல்ல விடியலையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

புதிதாக வயலிலிருந்து வந்த செந்நெற்பச்சையரிசியும், கரும்பின் சக்கரையும், பசும்பாலும் சேர்த்து பொங்கிச் சூரியன் உதயமாகும் பொழுது படைத்து வரவேற்பது தமிழனின் வாழ்வியல் மரபு. செழுமையையும், இனிமையையும் குறிக்கும் பால், பழம், கரும்பு, இளநீர், மஞ்சள், பயறு என பொங்கலுடன் படைத்து சூரிய வணக்கம் செய்து, படைத்த பொங்கலையும், உணவு வகைகளையும் உற்றார், உறவினர், அயலவர்கள் என இன பந்துக்களுடன் கூடி பகிர்ந்து உண்டவை வரலாறு.

இந்தப் பசுமையான நினைவுகள், நிஜமாகவேண்டும். அந்த நம்பிக்கை இனியும் வலுவிழந்து போகாமல் இருக்க வேண்டும். தைப்பொங்கல் ஒரு தெய்வீக அர்ப்பணிப்புத் தினமாகும். மருதநிலத்து மக்கள் கையேந்தி நிற்கும் நிலை மாறவேண்டும். திக்கற்றவனுக்கு தெய்வம் தான் துணை என்ற மூதுரை மாத்திரமல்ல கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற நம்பிக்கையோடும் வாழும் எமது மக்களின் எண்ணங்கள், அபிலாசைகள் நிறைவேற வேண்டுமென்பதே மாமன்றத்தின் விருப்பம்.

இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டு இந்து மக்களின் சார்பாக நாங்கள் பின்வரும் பகிரங்க வேண்டுகோள்களை விடுக்க விரும்புகிறோம்.

இந்நாட்டில் எங்களின் சகோதர சகோதரிகள் பலர் இன்னும் அகதிகளாக வாழ்ந்து வரும் நிலைமை உடன் மாற்றப்படவேண்டும். தங்கள் சொந்த இல்லங்களில் இந்நாட்டின் பிரஜைகளாக சகல

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)


| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| **Chairman of the Board of Trustees** | **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | வேலுப்பிள்ளை கந்தசாமி | அ.கயிலாசபிள்ளை |
| *V.Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Velupillai Kandasamy* | *Abirami Kailasapillai* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2586620 (Res)* | *Phone: 2575566 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Mobile: 071-5349150* | *Fax : 2575472* |
| *hariomak@gmail.com* | *neela@mnlaw.lk* | *vkandasami@gmail.com* | *hariomak@gmail.com* |


சுதந்திரங்களுடனும் வாழ அவர்களுக்கு இத் “தை” பிறந்ததும் வழி பிறக்க வேண்டும். நாட்டில் சுமுகநிலை உருவாக வேண்டும். மூன்று தசாப்தங்களுக்கு மேல் அல்லலுறும் எமது மக்களின் துயரங்கள் நீக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்திபடுத்தும் அரசியல் தீர்வு இனிமேலும் தாமதிக்காது வழங்கப்படவேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் விரைவில் வழங்கப்பட்டு நாட்டில் சுமுகமான நிலை வரவேண்டும்.

தமிழர் திருநாளில் இறைவழிபாட்டில் ஈடுபட்டு இத்திருநாள் அமைதி, சமாதானம், சாந்தி நல்வாழ்வு தரவேண்டிநிற்போம். வரும் காலம் வளமான காலமாக இருக்க அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடிகளை பற்றுறுதியுடன் பற்றிக்கொள்வோமாக!

நன்றி
இறைபணியில்

கந்தையா நீலகண்டன்
தலைவர்

வே. கந்தசாமி
பொதுச் செயலாளர்.

Pongal Message - 14.01.2017/PR/E